# அமெரிக்க பந்தயப் புறா ஆஸ்திரேலியாவில் சிக்கியது



தங்கள் நாட்டில் சட்ட விரோதமாக நுழைந்த அமெரிக்க பந்தயப் புறா அதற்கான விளைவுகளை எதிர்கொள்ளும் என ஆஸ்திரேலிய பிரதமர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பந்தயப் புறா ஒன்று ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் உள்ள தோட்டம் ஒன்றில் சிக்கியது. நோய்கள் பரவலைதடுக்கும்பொருட்டு உயிருள்ள விலங்குகள் மற்றும் பறவைகளை ஆஸ்திரேயாவுக்குள் கொண்டு வர கடும் கட்டுப்பாடுகள் நடைமுறையில் உள்ளன.

இந்நிலையில், ஆஸ்திரேலியாவுக்குள் புகுந்த அமெரிக்க புறாவை நோய் தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கையாக, கருணைக் கொலை செய்ய அந்நாட்டு அரசு எண்ணியது. இருப்பினும் அமெரிக்கா ஒப்புக் கொண்டால், பறவையை மீண்டும் அந்நாட்டிற்கே அனுப்பவும் ஆஸ்திரேலிய அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

# அமெரிக்கப் பொருளாதாரத்தை மீட்க 1.9 இலட்சம் கோடி டொலர்கள்



உலக அளவில் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா தொடர்ந்து முதலிடத்தில் இருக்கிறது.

அங்கு வைரஸ் தொற்றும் அதனால் நிகழும் மரணங்களும் மட்டுமல்லாமல் இதுவரைக்கும் ஒரு கோடிக்கும் அதிகமான அமெரிக்கர்கள் வேலையை இழந்து வறுமை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதனிடையே டிரம்பைவிட சிறப்பான முறையில் கொரோனா வைரஸ் பிரச்சனையைக் கையாளுவேன் என்ற பிரசாரத்தின் மூலம் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற ஜோ பைடன் கொரோனா தொற்றின் தாக்கத்தில் இருந்து அமெரிக்க பொருளாதாரத்தை மீட்க 1.9 லட்சம் கோடி அமெரிக்க டாலர் செலவிடுவதற்கான திட்டத்தை வெளியிட்டுள்ளார். இதன் இலங்கை மதிப்பு சுமார் ரூ.360 லட்சத்து 832 கோடியாகும்.

இந்த திட்டத்துக்கு அமெரிக்க நாடாளுமன்றம் ஒப்புதல் கொடுக்குமானால், இதன் மூலம் ஒவ்வொரு அமெரிக்கரும் தலா 1,400 டொலர் (சுமார் ரூ.2.65 லட்சம்) நிதியுதவி பெறுவார்கள் என ஜோ பைடன் தெரிவித்தார்.

மேலும் கொரோனாவால் வேலை இழந்தவர்களுக்கு வாரம் தோறும் வழங்கப்படும் நிவாரண தொகை 300 டாலரில் இருந்து 400 டாலராக உயர்த்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆப்கானில் அமெரிக்க படைக்குறைப்பு மீதமிருப்பது வெறும் 2,500 படையினரே



ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க படையினரின் எண்ணிக்கை 2,500 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது, 2001 ம் ஆண்டின் பின்னர் அமெரிக்கப் படைகளின் மிகக் குறைந்த எணிக்கை என்று பென்டகன் வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளது.

ட்ரம்பின் நிர்வாகம் ஆப்கானிஸ்தானில் உள்ள படைகளின் எண்ணிக்கையை படிப்படியாக குறைத்துவந்ததன் ஓர் அங்கமாக இந்த நடவடிக்கை அமைந்துள்ளது.

செப்டெம்பர் 11, 2001, ஆப்கானிஸ்தானை தளமாகக்கொண்ட இஸ்லாமிய அல்கொய்தா குழுவால் அமெரிக்கா மீதான தாக்குதல்களுக்குப் பின்னர் அமெரிக்கா ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட படையினரை ஆப்கானிஸ்தானில் நிலைநிறுத்தியிருந்தது.

ஆப்கானில் இருந்த 4500 படையினரில் 2000 படையினரை மீளவும் அமெரிக்காவுக்கு அழைக்கும் ஆவணத்தில் ட்ரம்ப் வெள்ளியன்று கையெழுத்திட்டதன் மூலம் மீதமுள்ள படையினர் 2500 ஆக குறைந்துள்ளது.

# கஞ்சா இலைகளை வைத்து தாய்லாந்தில் உணவு அறிமுகம்



சமீபத்தில் தாய்லாந்து அரசு கஞ்சா இலைகள் மற்றும் அவற்றின் வேர், தண்டு ஆகியவற்றை சட்டவிரோத போதை பொருள் பட்டியலில் இருந்து நீக்கியமையை தொடர்ந்து தாய்லாந்து மருத்துவமனை ஒன்றின் உணவகத்தில்கஞ்சா இலைகளை வைத்து தயாரிக்கப்படும் உணவுகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

கிழக்கு பாங்கொக்கில் கஞ்சா இலைகளை வைத்து சான் வெட்ஜ், ஜூஸ், பொரியல் உள்ளிட்ட உணவு வகைகள் தயாரிக்கப்படுகின்றன.

மேலும், மாமிசஉணவுகளுக்கு சுவையூட்டியாகவும் கஞ்சா இலைகள் பயன்படுத்தப்படுவது வாடிக்கையாளர்களின் வரவேற்பை பெற்றுள்ளது.



# டெல்லியில் கடும் பனிமூட்டத்தால் விமானங்கள் பயணங்கள் தாமதம்!



டெல்லியில் பனிமூட்டத்தால் பார்வைப் புலப்பாடு குறைந்ததால் 80 விமானங்கள் புறப்படுவதும், 50 விமானங்கள் தரையிறங்குவதும் தாமதமாகின.

நாட்டின் வட மாநிலங்களில் கடுங்குளிர் நிலவி வருகிறது. டெல்லி, லக்னோ, அமிர்தசரஸ் நகரங்களில் கடும் பனிமூட்டத்தால் பார்வைப் புலப்பாடு மிகவும் குறைவாக உள்ளது.

இதே நிலை நாளைக்கும் நீடிக்கும் என்றும், திங்களன்று பனிமூட்டம் சற்றுக் குறையும் என்றும் வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இன்று பனிமூட்டத்தின் காரணமாக டெல்லியில் இருந்து 80 விமானங்கள் புறப்படுவதும், பிற நகரங்களில் இருந்து டெல்லிக்கு வந்த 50 விமானங்கள் தரையிறங்குவதும் தாமதமாயின.

# கொவிட் தடுப்பூசி போடுதல் இந்தியா எங்கும் ஆரம்பம்!

## முதல் நாளில் 3 லட்சம் பேருக்கு





இந்தியாவில் முதல் கொரோனா தடுப்பூசி டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையின் தூய்மைப் பணியாளருக்கு போடப்பட்டது. எய்ம்ஸ் இயக்குநர், சீரம் இன்ஸ்டியூட் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி உள்ளிட்ட சுமார் 3 லட்சம் பேர் இன்று தடுப்பூசி போட்டுக் கொண்டனர்.

டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் தடுப்பூசி போடும் திட்டத்தில் பங்கேற்ற மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்வர்தன், பாரத்பயோடெக் கோவேக்சின் தடுப்பு மருந்தை கூடியிருந்தவர்களுக்கு காட்டினார். கொரோனாவுக்கு எதிரான போரில் தடுப்பு மருந்து உயிர்காக்கும் சஞ்சீவனியாக செயல்படும் என்றார்.

தடுப்பூசி போடும் திட்டத்தை பிரதமர் காணொலியில் தொடக்கி வைத்தவுடன், டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனை தூய்மைப் பணியாளர் மணீஷ் குமாருக்கு முதல் தடுப்பூசி போடப்பட்டது. டெல்லி எய்ம்ஸ் இயக்குநர் ரண்தீப் குலேரியாவும் தடுப்பூசி போட்டுக் கொண்டார்.

டெல்லி, ஜம்மு – காஷ்மீர், ஒடிசா என மாநிலந்தோறும் கொரோனா தடுப்பூசி திட்டம் தொடங்கியது. குஜராத், உத்தரப்பிரதேசம், ஆந்திரா, உத்தரகாண்ட் உள்ளிட்ட மாநிலங்களில் முதலமைச்சர்கள் தடுப்பூசி போடும் திட்டத்தை தொடங்கி வைத்தனர்.

கோவிஷீல்டு மருந்தை தயாரிக்கும் புனே சீரம் இன்ஸ்டியூட் நிறுவனத்தின் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி அடார் பூனவல்லாவும் தடுப்பூசி போட்டுக்கொண்டார்.

மகாராஷ்டிராவில் கோலம்போட்டும், செவிலியர்கள் கைதட்டியும், குஜராத்தில் வெடிகளை வெடித்தும், பல்வேறு மருத்துவமனைகளை அலங்கரித்தும் கொரோனா தடுப்பூசி திட்டத்திற்கு வரவேற்பு தெரிவிக்கப்பட்டது.

# அரசின் தடை உத்தரவை மீறி ஆந்திராவில் சேவல் சண்டை



பொங்கலை முன்னிட்டு ஆந்திராவின் கடலோர மாவட்டங்களில் அரசின் தடை உத்தரவை மீறி சேவல் சண்டை விறுவிறுப்பாக நடைபெற்றது.

கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர் ஆகிய மாவட்டங்களில் சேவலின் காலில் கத்திகளைக் கட்டியும், ஆயிரக்கணக்கான ரூபாய்களை பந்தயமாக வைத்தும் பொங்கல் சமயத்தில் இந்த சண்டை நடைபெறும்.

சட்டப்படி தடை அமுலில் இருந்தாலும் மக்கள் பிரதிநிதிகள் ஆதரவுடன் பிரம்மாண்டமான அளவில் இப்பகுதியில் பந்தல்போட்டு, விரிவான விளம்பரம் செய்து சேவல் சண்டை நடத்தப்படுகிறது.

# அயோத்தியில் ராமர் கோவில் கட்ட மக்களிடம் நிதி திரட்டும் நடவடிக்கை



அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவதற்கான நன்கொடைகள் திரட்டும் பணி தொடங்கியுள்ளது. குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தமது சொந்த சேமிப்பில் இருந்து 5 லட்சம் ரூபா நன்கொடை வழங்கி இதனைத் தொடங்கிவைத்தார்.

நாடு முழுவதும் உள்ள 65 கோடி இந்துக்களிடம் நிதிதிரட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக விஷ்வ இந்து பரிஷத்தின் செயல் தலைவர் அலோக் குமார் தெரிவித்துள்ளார்.

மத்தியப் பிரதேச முதலமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் ராமர் கோவில் கட்ட ஒரு லட்சம் ரூபா நன்கொடை வழங்கியுள்ளார்.

# இராமர் கோயில் கட்டுவதற்கு ரூ.1,11,11,111 அளித்த பிரமுகர்



உத்தரப்பிரதேசம் மாநிலம் அயோத்தியில் ராமர் கோயில் கட்டுமானத்திற்கு உத்தரப் பிரதேசத்தின் தேஸ்கான் தொகுதியின் முன்னாள் எம்.எல்.ஏ. சுரேந்திர பகதூர் சிங், கோயில் கட்டுமானத்திற்கான தனது பங்களிப்பாக ஒரு கோடியே 11 லட்சத்து, 11 ஆயிரத்து 111 ரூபாய்கான (ரூ.1,11,11,111) காசோலையை வழங்கினார்.

மேலும், துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, மத்தியப் பிரதேச முதல்வர் சிவ்ராஜ் சிங் சவுகான், உத்தராகண்ட் முதல்வர் திரிவேந்திர சிங் ராவத், குஜராத் துணை முதல்வர் நிதின் படேல் மற்றும் உத்தரப் பிரதேசம், ஜார்க்கண்ட், உத்தரகண்ட் மாநில கவர்னர்கள் உள்ளிட்ட பல்வேறு முக்கியப் பிரமுகர்களும் கோயில் கட்டுமானப் பணிகளுக்காக நன்கொடை அளித்துள்ளனர்.

# ‘வாட்ஸ்அப்’ அந்தர் பல்டி!

‘பிரைவசி பொலிஸி’ (தனிப்பட்ட உரிமை) விவகாரத்தில் வாட்ஸ்அப் எடுத்த திடீர் முடிவு பற்றிய முழு விவரங்கள் வெளியாகியுள்ளன.

‘வாட்ஸ்அப்’ செயலியில் அறிவிக்கப்பட்ட புது ‘பிரைவசி பொலிஸி’ மாற்றத்தை அமுலாக்கும் நடவடிக்கையை பரிசீலனை செய்வதாக அந்நிறுவனம் அறிவித்து உள்ளது.

சமீபத்திய ‘அப்டேட்’ குறித்து பலருக்குக் குழப்பம் இருப்பதாக எங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது. புதிய பிரைவசி பொலிஸி பற்றி கவலை எழுப்பும் தவறான தகவல் பரவி வருகிறது. அனைவரும் எங்களின் கொள்கைகள் மற்றும் உண்மையை புரிந்து கொள்வதற்கு நாங்கள் உதவுகிறோம். என வாட்ஸ்அப் தனது வலைதளத்தில் குறிப்பிட்டு இருக்கிறது.

முன்னதாக பெப்ரவரி 8 ஆம் திகதிக்குள் பயனர்கள் புதிய பிரைவசி பொலிஸியை ஏற்றுக் கொள்ள சம்மதம் தெரிவிக்க வாட்ஸ்அப் கெடு விதித்து இருந்தது. தற்சமயம் இந்த காலக்கெடு மே 15 வரை நீடிக்கப்படுவதாக வாட்ஸ்அப் தெரிவித்து உள்ளது.

உலகம் முழுக்க என்ட் – டு – என்ட் என்க்ரிப்ஷன் வசதியை பயனர்களுக்கு வழங்க வாட்ஸ்அப் உதவியது. தற்சமயம் இந்த பாதுகாப்பான தொழில்நுட்பத்தை தொடர்ந்து பயனர்களுக்கு வழங்கும் குறிக்கோள் கொண்டிருக்கிறோம். எங்களிடம் கருத்துக்களை எடுத்துரைத்த அனைவருக்கும் நன்றி.

“எங்களால் முடிந்தவரை வாட்ஸ்அப் தளத்தினை சிறந்த தகவல் பரிமாற்ற சேவையாக உருவாக்க தொடர்ந்து பல்வேறு முயற்சிகளை மேற்கொள்வோம். – என வாட்ஸ்அப் தனது வலைதளத்தில் பதிவிட்டு உள்ளது.


# கல்யாணமாலை

## வட சர்வதேச திருமண சேவை





| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1991.06.05 | பிறந்த திகதி - 1981.12.11 |
| மதம் - இந்து | மதம் - இந்து v |
| நட்சத்திரம் - சதயம் | நட்சத்திரம் - மிருகசீரடம் |
| செவ் - 2 இல் | செவ் - --- |
| பாவம் - 41 1/4 | பாவம் - 31 3/4 |
| கல்வி - பட்டதாரி | கல்வி - O/L |
| தொழில் - வங்கி உத்தியோகம் | தொழில் - --- |
| எதிர்பார்ப்பு - அரசாங்க உத்தியோகம் | எதிர்பார்ப்பு - சாதாரண கடை சொந்தத் தொழில். |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை

077 3434 415
077 8578 528

# வடக்கு, கிழக்கு நிரந்தரமாக இணைக்கப்பட்டு ‘மாநில சுயாட்சி’ என பெயரிடப்பட வேண்டும்!

## மாக்சிஸ லெனிஸிஸ கட்சி புதிய அரசமைப்புக்கு ஆலோசனை

கொழும்பு, ஜன.16

வடக்கு கிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாக ஒன்றிணைக்கப்பட்டு தமிழ் மக்களுக்கான சுயாட்சி அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என புதிய ஜனநாயக மாக்சிஸ லெனிஸிஸ சக் கட்சி ஆலோசனை வழங்கியுள்ளது.

அத்துடன், இவ்வாறு உருவாக்கப்படும் சுயாட்சிப் பிரதேசம் ‘வடக்கு கிழக்கு மாகாண சுயாட்சி’ அல்லது ‘மாநில சுயாட்சி’ என பெயரிடப்பட வேண்டும் என புதிய அரசமைப்புக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான ஆலோசனைகள் அரசாங்கத்தால் அனைத்து தரப்புகளிடமிருந்தும் கோரப்பட்டிருந்த நிலையில், குறித்த கட்சியின் அரசியல்குழுவால் கடந்த மாதம் அனுப்பி வைக்கப்பட்ட ஆலோசனை அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த ஆலோசனை அறிக்கையில் -

இந்த நாட்டின் நான்கு தேசிய இனங்களாக சிங்களவர், தமிழர், இஸ்லாமியர், மலையகத் தமிழர் ஆகியோரும் தேசிய சிறுபான்மையினராக பறங்கியர், மலாயர், வேடுவர், ஆபிரிக்கர் (கபீர்), பறதர், குறவர், கொழும்பு செட்டி, மலையாளிகள், தெலுங்கர் ஆகியோரும், சமயங்களாக பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களும் மொழிகளாக சிங்களம், தமிழ் ஆகியனவும் எவ்வித பாரபட்சமும் பாராட்டப்படாதவையாக அங்கீகரிக்கப்பட வேண்டும். இலங்கையின் தேசியக் கொடியானது இந்த அம்சங்களைப் பிரதிபலிக்கும் வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

அரசு பிராந்திய சுயாட்சி அமைப்புகளை உடையதாக உள்ளாட்சி நிறுவனங்களுக்கிடையே அதிகாரம் பகிரப்பட்ட இறையாண்மையும் தன்னாதிக்கமும் உடைய ஆட்சி அதிகாரத்தைக் கொண்டிருக்க வேண்டும். இலங்கை இன, மத, மொழி, கலாசார பல்வகைமை கொண்ட நாடு என்ற வகையில் வர்க்க, மத, சாதி, மொழி, பாலினம் மற்றும் அனைத்து வகை பாகுபாடுகளையும் நீக்குவதன் மூலமும் பங்குபற்றும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதன் மூலமும் பொருளாதார சமத்துவமும் சமூக நீதியும் நிலை நாட்டப்பட வேண்டும்.

இலங்கை சுதந்திரமும் மக்களின் இறைமையும் மக்கள் அதிகாரத்தை வலுப்படுத்தும் ஆட்சியமைப்பையும் கொண்டதாக இருப்பதுடன், அந்த இறைமை நாட்டின் தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், அரச ஊழியர்கள் உள்ளிட்ட அனைத்து உழைக்கும் மக்களுக்கும் தேசிய இனங்கள், தேசிய சிறுபான்மையினர், பெண்கள் உட்பட அனைவருக்கும் உரித்தானதாகும்.

இத்தகைய மக்களின் இறைமை, நிர்வாகத் துறை, நீதித் துறை, சட்டவாக்கத் துறை ஆகியவற்றுக்கு சர்வஜன வாக்கெடுப்பு மூலமான மக்கள் தீர்ப்பு ஊடாக பங்குபற்றும் உரிமை, திருப்பி அழைக்கும் அதிகாரம், அடிப்படை உரிமைகள் பாதுகாப்பு, அதிகாரப் பரவலாக்கம், பொறுப்புக் கூறல் என்பவற்றை உள்ளடக்கியதாக தற்காலிகமாகக் கையளிக்கப்பட வேண்டும்.

தொடரும் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக, இலங்கையின் அனைத்து தேசிய இனங்களினதும் சிறுபான்மை தேசியங்களினதும் வளர்ச்சி, பாதுகாப்பு, இன அபிலாஷைகளை உறுதிப்படுத்தும் வகையிலும் காணி, வீடமைப்பு போன்ற அடிப்படை உரிமைகள், பொருளாதார சுதந்திரம் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் வகையிலும் தேசிய இனங்களின் பாரம்பரிய வாழ்விடப் பிரதேசங்கள் கலாசார விழுமியங்களுக்கு இடையூறு இல்லாத வகையிலும் சுயாட்சி அதிகார அலகுகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இந்தச் சுயாட்சி அதிகார அலகுகள் மாகாணங்கள் அல்லது மாநிலங்கள் என அறியப்படலாம். இந்த அலகுகளின் எண்ணிக்கை இலங்கையின் சனத்தொகை செறிவிற்கு ஏற்ப நிர்வாக நடைமுறைகள் மக்களுக்கு இலகுவாக சென்றடையும் வகையில் வரையறுக்கபட வேண்டும்.

தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்கு கிழக்கு மாகாணங்களை நிரந்தரமாக ஒன்றிணைத்து தமிழ் மக்களுக்கான சுயாட்சி அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இவ்வாறு உருவாக்கப்படும் சுயாட்சிப் பிரதேசம் ‘வடக்கு கிழக்கு மாகாண சுயாட்சி’ அல்லது ‘மாநில சுயாட்சி’ என பெயரிடப்பட வேண்டும். இங்கு வாழும் சிங்கள, முஸ்லிம், மலையக மக்களுக்கான சுயாட்சி உள்ளமைப்புகள் அவர்களின் சன செறிவிற்கேற்ப நிலத்தொடர்புகளை இணைத்தோ, தனித்தனியாகவோ உருவாக்கப்பட வேண்டும்.

முஸ்லிம் மக்களை தனித்துவமான ஒரு தேசிய இனமாக ஏற்று அதன் அடிப்படையில் அந்த மக்கள் பாரம்பரியமாக செறிந்து வாழும் பிரதேசங்களையும் பரந்து வாழும் பிரதேசங்களையும் இணைத்தோ அல்லது தனித்தனியாகவோ கொண்ட சுயாட்சி அதிகார அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

சுமார் 200 வருடங்கள் வரலாற்றையும் தனித்துவமான சமூக பொருளாதார அரசியல் பண்பாட்டு அடையாளங்களையும் கொண்ட மலையக மக்கள் ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். மலையக மக்கள் செறிந்து வாழும் நிலத்தொடர்புடைய பிரதேசங்களை இணைத்து மலையக மக்களுக்கான சுயாட்சிப் பிரதேசம் உருவாக்கப்பட வேண்டும்.

சிங்கள மக்களுக்கான சுயாட்சி அதிகார அலகுகள், சனத்தொகை செறிவிற்கேற்ப வரையறை செய்யப்பட வேண்டும். அவை அவற்றின் பாரம்பரிய அடையாளங்களுக்கு ஏற்ப பெயரிடப்பட வேண்டும். இவ்வாறு உருவாக்கப்படும் சுயாட்சி பிரதேசங்களில் வாழும் சிறுபான்மை மக்களினதும் ஏனைய தேசிய சிறுபான்மையினரதும் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் சுயாட்சி உள்ளமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும். சுயாட்சி உள்ளமைப்புகளின் அதிகாரம் அவ்வமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்றவாறு வரையறுக்கப்பட வேண்டும்.

சிங்கள மக்களின் சுயாட்சி பிரதேசத்தில் வாழும் தமிழ், முஸ்லிம், மலையக மக்களுக்கான சுயாட்சி உள்ளமைப்புகள் அவர்களின் வாழ்விட பிதேசங்களையும் சன செறிவையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட வேண்டும். ஏனைய தேசிய சிறுபான்மையினரின் சனத்தொகை பரம்பலுக்கேற்ப அவர்களின் விருப்புக்கேற்றவாறு அவர்களின் அடையாளம், பண்பாடு, பாதுகாப்பு என்பனவற்றை உறுதிப்படுத்தக்கூடிய இணைந்த சுயாட்சி உள்ளமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும்.

இந்தச் சுயாட்சி அமைப்புகள் அந்தப் பிராந்தியத்தின் விவசாயம் கைத்தொழில் உள்ளிட்ட ஏனைய தொழில் துறைகளை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார அபிவிருத்தி, கைத்தொழில், வேலை வாய்ப்பு, இயற்கை வன வள ஜீவராசிகள் மற்றும் கடல் வளப் பாதுகாப்பு, நிலப் பகிர்வு, நீர்ப்பாசனம், விவசாயம், வீதிப் போக்குவரத்து, குடியேற்றம், வீடமைப்பு அபிவிருத்தி, கல்வி, பண்பாடு, சுகாதாரம் என்பவற்றுக்கான தலையீடற்ற சுயாதீனமான கொள்கை வகுப்பைக் கொண்டிருக்க வேண்டும்.

அத்துடன் இவை மத்திய அரசின் திட்டங்களை உரிய கலந்தாலோசனையின் அடிப்படையில் ஏற்கவோ அல்லது மறுக்கவோ பூரண அதிகாரம் உடையவையாக இருக்க வேண்டும். மேலும் சட்டம் ஒழுங்கைப் பேணல் உள்ளூர் பாதுகாப்பு என்பவற்றுக்குப் பூரண வகைகூறலை கொண்டிருக்க வேண்டும்.

அந்நிய அச்சுறுத்தலோ ஆக்கிரமிப்போ இல்லாதவிடத்து இராணுவத் தளங்களை உருவாக்குதல் அல்லது விரிவாக்குதல் தொடர்பாக சுயாட்சி நிர்வாகத்திடம் கலந்து பேசி முடிவெடுக்கப்படல் வேண்டும். நீதி, நிதி, நிர்வாகம் ஆகியவற்றை அரசியல் அமைப்புக்கு அமைய அந்தப் பிரதேச மக்களின் தேவைக்கேற்ப வளர்க்கவும் முன்னெடுக்கவும் முடியுமாய் இருத்தல் வேண்டும். - போன்ற பல விடயங்கள் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மோட்டார் சைக்கிள் கோர விபத்து மஸ்கெலியாவில் இளைஞன் சாவு!



மஸ்கெலியா சாமிமலை பிரதான வீதியின் பிரவுன்ஸ்விக் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காட்மோர் கல்கந்தை தோட்டத்தைச் சேர்ந்த 26 வயதான ரகுநாதன் என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மஸ்கெலியாவிலிருந்து காட் மோர் நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்றுக்கு, காட்மோர் பகுதியிலிருந்து மோட்டார் சைக்கிளில் சென்ற மேற்படி நபர் பிரவுன்ஸ்விக் பகுதியில் வைத்து இடம் கொடுக்க முற்படுகையில் நிலைதடு மாறி மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானது.

இதையடுத்து படுகாயமடைந்த இளைஞரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அந்த இளைஞரின் சடலம் மஸ்கெலியா பொது வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## தனிமைப்படுத்தலில் இருந்துள்ள பல பகுதிகள் விடுவிக்கப்பட்டன!

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக அமுல்படுத்தப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் சட்டம், பல பகுதிகளில் தளர்த்தப்பட்டுள்ளதாகக் கொரோனாத் தடுப்பு செயலணி அறிவித்துள்ளது.

இதற்கமைய எஹெலியகொட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மின்னான, போபத்தெல்ல, வெலேகொட, அஸ்கஹுல மற்றும் யகுதாகொட ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தல் நடவடிக்கையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று பாணந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 675 தொடவத்த கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளும் தனிமைப்படுத்ததில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, பேருவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மங்கொன கிழக்கு மற்றும் மங்கொன மேற்கு கிராம சேவகர் பிரிவுகளும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளில் அமுலில் இருந்த தனிமைப்படுத்தல் சட்டம் இன்று (சனிக்கிழமை) காலை 5 மணி முதல் தளர்த்தப்பட்டுள்ளதாக கொரோனா தடுப்பு செயலணி குறிப்பிட்டுள்ளது.

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!
நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.01.2021இல் வெளியிடப்பெற்றது.